FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364126

1. District : சிவகங்கை மாவட்டம் PS: மானா.தா.கா பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 67 முத.அ. எண் Date: 09/07/26 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended by the PC Act 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 01/07/26 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 08/07/26 Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09/07/26 Time : நேரம் 08.40 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 09.15 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருப்புவனம் காவல் நிலையம் தென் மேற்கு, சுமார் 30 கி.மீ
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S.K. முருகவேல்பாண்டியன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : கருப்பையா தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 56/26 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி தீர்த்தம்பாறை, மடைகொண்டான் அக்கல், கையெழுத்தை (TK) சிவகங்கை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சுகந்தி நிறைபீடு சார்பு ஆய்வாளர்
திருப்புவனம் காவல் நிலையம், சிவகங்கை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 09.07.2026 தேதி 08.40 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், இடைக்காட்டூர் அஞ்சல், சீரம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் கருப்பையா என்பவரின் மகன் திரு.S.K.தெய்வேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட திருப்புவனம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் (SSI) திரு.சக்தி என்பவரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவரின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

9/7/26

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

09/07/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09/7/26 at 10.00 hrs

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை [illegible]

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண். 07/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

09.07.2026-ம் தேதி 09.15 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 07/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், S.K.தெய்வேந்திரன், த/பெ.கருப்பையா, சீரம்பட்டி, இடைக்காட்டூர் அஞ்சல், சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனது மகன் சூர்யபிரகாஷ் என்பவர், திருப்புவனத்தில் வசிக்கும் கொடைக்கானலைச் சேர்ந்த சந்திரகுமார் என்பவரின் மகள் ஜனனி என்பவரை 29.06.2026 அன்று கோயம்புத்தூரில் வைத்து காதல் திருமணம் செய்து கொண்டார். இருவரும் மேஜர் வயதுடையவர்களும், ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஆவர். பெண் வீட்டார் மூலம் ஏதேனும் பிரச்சினை ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில், நான் கோயம்புத்தூர் காட்டூர் காவல் நிலையத்தில் மணமக்கள் இருவரையும் ஆஜர் செய்தேன் இதற்கிடையில், பெண்ணின் தந்தை சந்திரகுமார் அளித்த புகாரின் அடிப்படையில், என்னையும், எனது மகன் மற்றும் மருமகளையும் திருப்புவனம் காவல் நிலையத்தில் ஆஜராகுமாறு கூறினார்கள். கடந்த 01.07.2026ம் தேதி அன்று விசாரணை நடைபெற்றது. அப்போது இருவரும் மேஜர் என்பதால் எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பிவிட்டார்கள். மேலும், திருமணம் நடைபெற்றதற்கான புகைப்படங்களையும் அன்றே காவல் நிலையத்தில் சமர்ப்பித்தோம். அந்த விசாரணையின்போது, திருப்புவனம் காவல் நிலையத்தில் பணியாற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் (SSI) சக்தி என்பவர், உங்கள் பிரச்சனையை தீர்க்க நான்தான் காரணமாயிருந்தேன், அதனால் தனக்கும் மற்ற காவலர்களுக்கும் சேர்த்து ரூ.10,000/- தர வேண்டும் என்று என்னிடம் கேட்டார். நான் அதற்கு மறுப்பு தெரிவித்தேன். இருப்பினும், அவரது வற்புறுத்தலின் பேரில், 01.07.2026ம் தேதி மாலை அவர் கூறிய வேறு ஒரு நபரின் Google Pay எண்ணுக்கு ரூ.5,000/- அனுப்பி வைத்தேன். அதன் பிறகு, 06.07.2026ம் தேதி அன்று என்னுடைய செல்போன் எண்ணான 81242 78525-க்கு, அவரது 99425 23542 என்ற செல்போன் எண்ணிலிருந்து தொடர்பு கொண்டு, மீதமுள்ள ரூ.5,000/- பணத்தை தர வேண்டும் என்று கேட்டார். மறுநாள் 07.07.2026 அன்று மீண்டும் அதே செல்போன் எண்ணிலிருந்து என்னை தொடர்பு கொண்டு, அதே தொகையான ரூ.5,000/-த்தை

தருமாறு வற்புறுத்தி கேட்டார். நான் பணம் கொடுக்க தாமதம் செய்ததால், எனது மகனின் திருமணச் சான்றிதழின் நம்பகத்தன்மையை தேவையில்லாமல் கேள்வி எழுப்பி என்னை மனஉளைச்சலுக்கு ஆளாக்கினார். அதற்கு நான், திருமணம் சட்டப்படி நடைபெற்றுள்ளது என்றும், உங்களுக்கு தேவையென்றால் 15 நாட்களுக்குள் திருமணச் சான்றிதழை தந்து விடுகிறேன் என்றும் கூறினேன். இருந்தபோதிலும், ஏற்கனவே நான் சமர்ப்பித்த எனது மகனின் திருமண புகைப்படங்களையே மீண்டும் கொண்டு வருமாறு கூறினார். அதன்படி, 08.07.2026 அன்று நான் நேரில் திருப்புவனம் காவல் நிலையத்திற்குச் சென்று அவரைச் சந்தித்து திருமண புகைப்படங்களை மீண்டும் கொடுத்தேன். அப்போதும், மீதமுள்ள ரூ.5,000/- பணத்தை தருமாறு கேட்டார். அதற்கு நான், மிகவும் கஷ்டப்படுகிறேன் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு, சரி ரூ.2,000/-த்தை குறைத்துக் கொண்டு, ரூ.3,000/- த்தை நாளைக்கு கொண்டு வந்து தன்னிடம் தருமாறும், நீங்கள் இன்னும் முறையான திருமண பதிவுச் சான்றிதழ் என்னிடம் தரவில்லை, இதை வைத்து உங்களுக்கு ஏதேனும் பிரச்சனை வர வாய்ப்பிருக்கிறது. அதனால் நான் கேட்ட பணத்தை கண்டிப்பாக கொடுத்துவிடுங்கள் என்றும் திருப்புவனம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் (SSI) சக்தி அவர்கள் மீண்டும் வற்புறுத்தி கேட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, என்னிடம் லஞ்சம் பெற்று, மேலும் லஞ்சம் கேட்டு தொடர்ந்து தொந்தரவு செய்து வரும் திருப்புவனம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் (SSI) திரு.சக்தி அவர்கள் மீது தக்க சட்ட நடவடிக்கை எடுத்து, எனக்கு உரிய நீதி கிடைக்கச் செய்யுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, sd/- xxxxx.

Sir, Received the complaint on 09.07.2026 at 08.40 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.07/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment)

Act 2018 on 09.07.2026 at 09.15 hrs and took up for investigation. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிபதி, முதன்மை மாவட்ட நீதிமன்றம் சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

9/7/26

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Sivagangai